**SC No.56/2020**

**எதிரி ஆஜர்.**

**அ.சா.12 திரு. விநாயகமூர்த்தி**

**தேதி-18.03.2024**

**இன்று மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

**வல்லிக்கண்ணன்,சேகர், முருகன் ஆகியோர் எல்லோரும் அ.சா.1வின் உறவினர்கள் என்றால் சரிதான். அ.சா.1 சாமி, அ.சா.2 இறந்தவரின் மனைவி, அ.சா.3 சேகர் ஆகிய மூவரும் ரத்தக் கறை படிந்த உடைகளை என்னிடம் ஆஜர்படுத்தினார்களா என்றால் ஆஜர்செய்யவில்லை. வழக்கு விசாரணையின் போது தங்களிடம் இவ்வாறு ரத்தக் கறை படிந்த உடைகளை என்னிடம் தெரிவித்தார்களா என்றால் தெரிவிக்கவில்லை.**

**அ.சா.1 சாமி புகாரிலும் என்னுடைய விசாரணையிலும் எதிரிக்கும் எங்களுக்கும் பொதுவாக வரப்பு உள்ளது என்று சொல்லவில்லை என்றால் பொதுவான வரப்பு உள்ளது என்று சொல்லவில்லை, தன்னுடைய நிலத்தில் செல்வது சம்மந்தமாக கூறியுள்ளார். வழி சம்மந்தமாக அடிக்கடி எங்களுக்குள் சண்டை வந்து பஞ்சாயத்து நடக்கும் என்றும் அப்படி ஒரு தடவை நடக்கும் போது லைன் போட அனுமதித்தது சம்மந்தமாக 10 பேர் கையொப்பம் போட்டது குறித்து அ.சா.1 புகாரிலும் என் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, வழி சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்று கூறியுள்ளார்கள், 10 பேர் கையொப்பம் போட்டது சம்மந்தமாக புகாரில் சொல்லவில்லை, ஆனால் 10 கையொப்பம் போட்டது குறித்தும் என்னுடைய 161 சி.ஆர்.பி.சி வாக்குமூலத்தில் சொல்லவில்லை, ஆனால் என்னுடைய விசாரணையில் தெரிந்துக் கொண்டேன்,**

சாட்சி மீண்டும் 161 கு.வி.மு.ச. வாக்குமூலத்தில் இரு தரப்பினருக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்று கூறியுள்ளார்கள், அது சம்மந்தமாக எங்களுக்கு வாய் சண்டை உள்ளது, மேலும் 5 நபர்கள் உங்களிடம் சண்டையிட மாட்டேன் என்று எதிரி எழுதிக் கொடுத்ததை ஆவணங்களாக சமர்ப்பித்துள்ளேன்.

அவ்வாறு 161 கு.வி.மு.ச.வில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், அது சம்மந்தமாக கைப்பற்றுதல் மகசரில் தாக்கல் செய்யவில்லை என்றால் கைப்பற்றுதல் மகசராக தாக்கல் செய்யவில்லை, அது சம்மந்தமாக ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் இல்லை என்றாலும், எங்களுக்கு சம்மந்தமான போலீஸ் ஸ்டேண்டிங் ஆர்டரிலும் அவ்வாறு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணமாகபோல பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை என்றாலும், எதிரி அவ்வாறு எந்த ஆவணத்தையும் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் வழக்கிற்காக என்னால் புணையப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் தான் என்றால் சரியல்ல. அ.சா.1 தன் முதல் விசாரணையில் நான் எதிரியை கேட்க சென்ற போது தன்னுடன் தன் அம்மா வந்த விவரத்தை புகாரில்குறிப்பிட்டுசொல்லியுள்ளாரா என்றால் புகாரில் குறிப்பிடப்படவில்லை, வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்.

அ.சா.1வின் 161 கு.வி.மு.ச. வாக்குமூலத்தில் அ.சா.1 ம் இறந்து போன நபரும் தான் தஞ்சியப்பனை கேட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு பிறகு சத்தம் கேட்டு தான் அவருடைய அம்மா வந்ததாக உள்ளது என்றால் சரியல்ல, அவருடைய அம்மா அங்கேயே தான் உள்ளார். அ.சா.1 வாக்குமூலத்தில் அவருடைய அம்மா அங்கேயே உள்ளதாக எங்கேயாவது சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. 161 கு.வி.மு.ச. வாக்குமூலத்தில் அவ்வாறு

குறிப்பிடப்படவில்லை என்றாலும் நான் தவறுதலாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, அவருடைய அம்மா அங்கேயே தான் இருந்ததாக என்னுடைய விசாரணையில் தெரியவந்தது.

அ.சா.1 வாக்குமூலத்திலும் புகாரிலும், அந்த இடத்தை லீசுக்கு விட்டு சம்பாதிக்க என் நிலம் தான் கிடைத்ததா என்று பயங்கரமான கெட்ட வார்த்தைகளால் எதிரி திட்டினார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளரா என்றால் ரெயில்வே துறையினரிடம்அந்த இடத்தில் தரைபாலம் கட்டி வருகிறவர்கள் எங்கள் நிலத்திடம் வந்து சிறுநீர் கழிப்பதாக அசிங்கமாவும் அருவருப்பாகவும் கெட்ட வார்த்தைகளாலும் திட்டியுள்ளார்.

லீசு குறித்து சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. லீசு என்று சொல்லப்படவில்லை, ஒப்பந்தம் என்று சொல்லப்பட்டுள்ளது. புகாரிலும் வாக்குமூலத்திலும் இல்லாத சங்கதிகளை இருப்பதாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சிகள் சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் தடத்தை தவிர்த்து வேறு தடமும் உள்ளது என்று சொல்லியுள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியவில்லை.

அ.சா.3 சாட்சி சேகர் என்பவர் என்னுடைய விசாரணையில் குய்யோ முய்யோ என்ற அடித்த சத்தம் கேட்டது என்று சொல்லியுள்ளரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை, வாய் சண்டை போட்டுக் கொண்டார்கள் என்று சொல்லியுள்ளார். சாட்சி சேகர் என்பவர் மாட்டை கட்டி விட்டு போனேன் என்று என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளரா என்றால் மாட்டை கட்டி விட்டு போனது பற்றி என்னிடம் சொல்லவில்லை, தன் மச்சானிடம் பேசிக்கொண்டிருந்ததாக கூறியுள்ளார். கொம்பு இரண்டாக பிளந்துவிட்டது என்று கூறியுள்ளரா என்றால் உடைந்துவிட்டது என்று கூறியுள்ளார்.

இரண்டாக பிளந்த கட்டையில் ஒன்றை எடுத்து சாமி எதிரியை

அடித்துவிட்டார் என்று அ.சா.3 சேகர் என் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை, உடைந்த ஒரு பாகமான கூர்மையான நாட்டு தேக்கு கொம்பை எடுத்து என் மச்சான் கண்ணனை இடது பக்க மார்பின் மீது ஓங்கி குத்தியதாக கூறியுள்ளார். சிகிச்சைக்கு பிறகு களம்பூர் காவல் நிலையத்திற்கு வந்தோம் என்று கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார்.

இறந்தவரை காரில் அழைத்துச் சென்றோம் என்று அ.சா.3 என் விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் எந்த வாகனத்தில் அழைத்துச் சென்றதாக குறிப்பிடவில்லை. அ.சா.4 வல்லிக்கண்ணன் இறந்த என் அண்ணன் வடக்கு பார்த்தது போல் நின்றுக் கொண்டிருந்தார் என்று என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் வடக்கு பார்த்தது போல் நின்றுக் கொண்டிருந்ததாக சொல்லவில்லை. நிலா ஒளியில் 10 அடிதூரத்தில் சம்பவத்தை பார்த்ததாக கூறியுள்ளாரா என்றால் நிலா ஒளியில் என்று சொல்லவில்லை, சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லியுள்ளார். என் அண்ணன் சாய்ந்த நிலையில் படுத்திருந்தார் என்று சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை, ஆனால் என் அண்ணன் கண்ணன் ரத்த காயத்துடன் மூச்சு பேச்சு இல்லாமல் அங்கேயே இறந்துவிட்டதாக கூறியுள்ளார்.

நான் போய் என் அண்ணனை தூக்கினேன், என் ஆடை ரத்தமாகி விட்டது என்று அ.சா.4 எனது விசாரணையில் சொல்லியுள்ளரா என்றால் சொல்லவில்லை. அ.சா.4 எனது விசாரணையில் நான் காவல் நிலையம் சென்றேன், என்னுடன் ரமேஷ் மற்றும் பழனி வந்திருந்தார்கள் என்று சொல்லியுள்ளாரா என்றால் ரமேஷ் மற்றும் பழனி பற்றி சொல்லவில்லை, சேகர் உடனிருந்ததாக கூறியுள்ளார். டில்லா மிஷின் வாங்குவது சம்மந்தமாக நான் என் அண்ணனை பார்க்க போனேன் என்று சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை, நான் அடிக்கடி என் அண்ணன் வீட்டிற்கு வந்து பேசிக் கொண்டிருப்பேன் என்று கூறியுள்ளார்.

வேலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டுச் சென்றது பற்றி அ.சா.4 என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் அது பற்றி கூறவில்லை, ஆரணி அரசு மருத்துவமனையில் பிரேதத்தின் மீது விசாரணையின் போது உடனிருந்ததாக கூறியுள்ளார். எதிரியை எந்த இடத்தில் வைத்து கைது செய்தேன் என்றால் களம்பூர் அண்ணா சிலையிடம் வைத்து கைது செய்தேன். களம்பூர் காவல் நிலையத்திற்கு எதிரில் தான் களம்பூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் உள்ளது என்றால் அதை பற்றி தெரியவில்லை. அ.சா.6 கிராம நிர்வாக அலுவலர் பணிபுரியும் அலுவலகம் எங்கே உள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் வேண்டுமென்றே எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், என்னிடம் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எந்த பொருளையும் எடுத்து என்னிடம் ஆஜர்ப்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. இறந்த நபரின் பிரேத பரிசோதனை வேலூர் அரசு மருத்துவமனையில் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கை ஆரணி அரசு மருத்துவமனையில் தயாரிக்கப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் தயாரிக்கப்பட்டது அல்ல, பிரேத விசாரணை அறிக்கை ஆரணி அரசு மருத்துவமனையில் சாட்சிகள் முற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

வழக்கில் பிரேத விசாரணை அறிக்கை, ஒப்புதல் வாக்குமூலம், மகசர்கள், பார்வை மகசர், மாதிரி வரைபடம் போன்ற அனைத்து ஆவணங்களும் எங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்றாலும், நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் அனைத்து ஆவணங்களும் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யயப்பட்டுள்ள

சான்று பொருட்களும் என்னுடைய ஆலோசனையின் பேரில் தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் நான் முறையாக புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றாலும், எதிரிக்கும் அவரது மனைவிக்கும் காயம் பட்டது சம்மந்தமாக எந்த விளக்கத்தையும் நான் கொடுக்கவில்லை என்றாலும், எதிரிக்கும் அவரது மனைவிக்கும் காயம் பட்டது சம்மந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தும், அந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொள்ளாமல் ஒரு சார்பாக குற்ற அறிக்கையும் இறுதி அறிக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் முறையான புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரியின் மீது பொய்யான குற்ற அறிக்கை தாக்கல் செய்தும், நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional Sessions Judge,
Arani.